

# ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்களாயும் பூமிக்குரிய ஞானத்தோடும் இருத்தல்

ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**
ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட் ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.
தற்போதைய பதிப்பு: 2024

**தகவல் தொடர்புக்கு**
All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA.

**தொலைபேசி:** +91-80-25452617
**மின்னஞ்சல்:** **bookrequest@apcwo.org**
**இணையதளம்:** **apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI, தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**
ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள "ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்" என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**
**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்** : apcworldmissions.org

(Tamil - Being Spiritually Minded and Earthly Wise)

# ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்களாயும்

# பூமிக்குரிய ஞானத்தோடும் இருத்தல்

# பொருளடக்கம்


அறிமுகம்

1. கிறிஸ்தவ வாழ்வில் பதற்றம் 1

2. தவறான தெரிவுகள், தவறுகள் மற்றும் அவற்றின் விளைவுகள் 4

3. ஆகவே, ஞானமுள்ளவர்களாய் இருங்கள் 6

4. ஆவிக்குரியது ஆனாலும் நடைமுறையானது 7

5. ஞானம்—நமது பாதுகாப்பு 10

6. தேவனுடைய நன்மை 12

# அறிமுகம்

ரோமர் 8:28

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**

இருந்தபோதிலும், தவறான தெரிந்தெடுத்தல்கள், புத்தியீனத்தினால் நிகழ்ந்த தவறுகள், தவறான தீர்மானங்கள், சோம்பேறித்தனத்தினால் ஏற்பட்ட பயங்கரமான விளைவுகள் மற்றும் சரியான ஆயத்தம் இல்லாமை ஆகியவற்றால் ஏற்படும் மற்ற பேரழிவுகளைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்? ஒரு கிறிஸ்தவனின் சொந்த செயலின் விளைவால் நடக்கும் காரியங்களைப் பற்றி நாம் என்ன சொல்வோம்? இவ்வுலக வாழ்வில் கல்வி கற்பதை புறக்கணிக்கும் அளவுக்கு ஆவிக்குரிய எண்ணம் கொண்ட கிறிஸ்தவனைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்? ஒரு கிறிஸ்தவனுடைய பொறுப்பின்மையால் நடக்கும் காரியங்களைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்? இவைகள் நேரிடுவதற்குக் காரணம் தேவனா?

ஏறக்குறைய மீளமுடியாத அளவிற்கு அதிக மனஅழுத்தங்களுக்கு மத்தியில் பல கிறிஸ்தவர்கள் கஷ்டப்படுவதையும், அவற்றில் சிக்கிக்கொள்வதையும் நாம் காண்கிறோம். தம்முடைய ஜனங்கள் கடினமான காலங்களைக் கடந்துசெல்லவும் சந்திக்கவும் தேவன் அனுமதிக்கிறார், அதன் மூலம் அந்த சூழ்நிலைகளினால் அவர்கள் பயனடையவும் பலப்படுத்தப்படவும் அவர் உதவுகிறார் என்று நமது இறையியல் நமக்கு விளக்குகிறது. ஆனால் இதுபோன்ற பாடுகள் மற்றும் சிரமங்களின் அனுபவங்கள் அனைத்தும் தேவனால் நியமிக்கப்பட்டதா?

நாம் சற்று பொறுமையாக நின்று, விஷயங்களைக் கொஞ்சம் உற்று கவனித்தால், சில சமயங்களில், நாம் இருக்கிற இக்கட்டான நிலைக்கு நம்மை இட்டுச் சென்ற திட்டவட்டமான முடிவுகளையும் தெரிவுகளையும் நம்மால் அடையாளம் காண முடியும். அது

எவ்வளவு அழகு நயமிக்கதாக இருந்திருந்தாலும்—நாம் எதிர்கொள்ளக்கூடிய அந்த விபத்துக்களை ஏற்படுத்தியது—நம்முடைய தவறான தெரிந்துகொள்ளுதல்கள்தான். நம் அனுபவங்களை ஆவிக்குரிய மயமாக்கி, இத்தகைய பாடுகளுக்கு தேவனை நாம் பொறுப்பாளியாக்க வேண்டுமா? நாம் அனைவரும் இன்னும் பூரணமுள்ளவர்களாக மாறாததால், தவறு செய்கிறோம் என்பது உண்மைதான். முதல் முறையாக நாம் சந்திக்கும் சூழ்நிலைகளில் தவறான தீர்ப்புகள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தலாம். நம்முடைய தவறான தெரிவுகள் தேவன் நமக்காக வைத்திருக்கும் திட்டங்களை எவ்வாறு பாதிக்கின்றன? தேவன் நமக்காக வைத்திருக்கும் உயர்ந்தவைகளும் சிறந்தவைகளுமான அவருடைய திட்டங்கள் நம் வாழ்வில் நிறைவேற்றப்படுவதை நம்முடைய தவறுகள் கெடுத்துப்போடுகிறதா, மாற்றுகிறதா அல்லது தடுக்கிறதா? நமது கிறிஸ்தவ விசுவாசத்தின் நடைமுறைப் பக்கத்திற்கு நம்மை விழிப்படையச் செய்வதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும். நமது வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதைக் குறித்த நமது முழுப் பொறுப்பையும் நமக்குப் புரியவைப்பதே இதன் நோக்கமாகும். நமது செயல்களை ஆவிக்குரிய மயமாக்குவதை நிறுத்திவிட்டு அவற்றுக்கான பொறுப்பை நாம் ஏற்க வேண்டும் என்பதற்கான அழைப்பே இது. இந்த வாழ்க்கையின் காரியங்களில் "ஞானமுள்ளவர்களாய்" இருக்கும்படி விழிப்படையச் செய்ய இது ஒரு அறிவுறுத்தலாகும்.

தேவன் ஆசீர்வதிப்பாராக !
ஆசிஷ் ராய்ச்சூர்

# 1
# கிறிஸ்தவ வாழ்வில் பதற்றம்

கொலோசெயர் 3:1,2

[1] **நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.**

[2] **பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.**

தேவனுடைய ராஜ்யத்திற்கு முற்றிலும் முரணான மற்றொரு ராஜ்யத்தின் ஜனங்கள் மத்தியில் வாழும் ஒரு கிறிஸ்தவன் *"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேட"* முயற்சிக்கும்போது, அவனது வாழ்க்கையில் தொடர்ந்து ஒரு பதற்றம் இருப்பதாகத் தெரிகிறது. நாம் இங்கே பூமியில் இருக்கிறோம், ஆனால் மேலே உள்ளவைகளை, அதாவது பரலோகத்தில் உள்ளவைகளை நாம் நாட வேண்டும். பூமியில் வாழ்வது என்பது ஒரு தொழிலைக் கட்டியெழுப்புதல், "ஒரு அந்தஸ்துள்ள நபராக" மாறுதல், வெற்றியை அடைதல், செல்வங்களைச் சேர்த்தல் போன்ற மிகப்பெரிய பொறுப்புகளை உள்ளடக்கியதாக இருக்கிறது, ஆனாலும் அலுவல் மிகுந்த தொழில் மற்றும் வியாபாரங்களுக்கு மத்தியில், நம் மனதை—நமது காரியங்கள், நமது விருப்பங்கள், நமது ஆசைகள், நமது நாட்டங்கள் போன்றவற்றில் மேலானவைகளை நாடும்படிக்கு ஒருமுகப்படுத்த நாம் வலியுறுத்தப்படுகிறோம்! ஒரு நபரின் ஆவிக்குரிய நிலைமையையும், மனதின் திறனையும் மற்றும் உணர்வு தொடர்பான திறன்களை அதிகரிக்கச் செய்யும் முயற்சிக்கான உண்மையான சவால் ஏதேனும் இருந்தால், அது மேலானவைகளை நாடுவதாக இருக்கலாம்! ஆனால், நம்மால் நிறைவேற்ற முடியாத ஒரு காரியத்தை, நாம் செய்து நிறைவேற்ற வேண்டும் என்று தேவன் நமக்கு சவால்விடமாட்டார். அவர் இந்தக் கட்டளையை நமக்குக் கொடுத்தார், ஏனென்றால் அதை நம்மால் செய்ய முடியும் என்று அவர் அறிந்திருக்கிறார்—நாம் தனியாக செயல்பட்டு அதைச் செய்ய முடியாது, மாறாக, அவர் அளிக்கும் பெலத்தினால்—அதைச் செய்து நிறைவேற்ற முடியும். ஆயினும்கூட, இந்தக் கட்டளையின் மூலம் நம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவது என்பது, "யதார்த்த" உலகில் செயல்படும்

ஒவ்வொரு ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவருக்கும் அது "பதற்றங்களை" ஏற்படுத்துவதை அவனால் நிச்சயமாக உணர முடியும்.

இரண்டு வெவ்வேறு திசைகளில் "இழுக்கப்படும்" அளவிற்கு அன்றாட வாழ்வில் ஏராளமான "சிக்கல்கள்" இருப்பதை ஒரு கிறிஸ்தவன் உணர்கிறான். உதாரணமாக, வெற்றியின் உண்மையான அளவுகோல்கள் என்ன? தற்காலிக தரங்களால் அடையப்பெற்ற வெற்றியானது, ஒருவனது சாதனைகள் மற்றும் அவன் பெற்ற செல்வங்களின் அடிப்படையில் அளவிடப்படுகிறது, அதேநேரத்தில் தேவனுடைய ராஜ்யத்தில் வெற்றி என்பது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறோமா இல்லையா என்பதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. பூமிக்குரிய சாதனைகளை சாதிப்பதிலும் மற்றும் பூமிக்குரிய செல்வங்களைப் பெறுவதிலும் எந்தத் தவறும் இல்லை, ஆனால் தேவனுடைய உன்னத அழைப்பானது *"அதை அடையும்படி நம் ஜீவனை இழக்க வேண்டும்"* (மத்தேயு 16:25) என்ற அழைப்பை விடுக்கிறது. ஆகவே, வாழ்க்கையில் எந்தப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டிய சந்தர்ப்பங்களை அணுகும்போது—அதாவது ஒருவரின் முன்னேற்றத்திற்காக உலகப் பிரகாரமான வெற்றியின் அளவுகளை அதிகரிக்கச் செய்யும் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமா அல்லது கிறிஸ்துவில் தேவனுடைய உன்னதமான அழைப்பை நிறைவேற்றும் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமா என்பன போன்ற சந்தர்ப்பங்களை அணுகும்போது, ஒரு கிறிஸ்தவர் தொடர் போராட்டத்தை எதிர்கொள்கிறார்.

அதோடு கூட ஒரு கிறிஸ்தவர் தனது பூமிக்குரிய யாத்திரையின்போது, பல "முரண்பாடான பகுதிகளில்," உலகத்துடனும் பிசாசுடனும் போராடவேண்டி இருக்கிறது. கர்த்தராகிய இயேசுதாமே சொன்னார், *"ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்"* (லூக்கா 16:8). இப்படி இருக்கக்கூடாது, ஆனால் சில நேரங்களில் காரியங்கள் அப்படித்தான் இருக்கின்றன, குறிப்பாக ஒளியின் பிள்ளைகள் பிதா தங்களுக்குக் கிடைக்கச் செய்யும் தெய்வீக ஞானத்தைப் பற்றிக்கொள்ளத் தவறும்போது, இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் அதிக புத்திமான்களாய் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் தங்கள்

அன்றாட வாழ்க்கையின் நடவடிக்கைகளில் *"இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகளுடன்"* தொடர்புகொள்ளவும், வேலை செய்யவும் மற்றும் பல சந்தர்ப்பங்களில் போட்டியிடவும் கற்றுக்கொள்ள வேண்டும். மேலும், கிறிஸ்தவர்கள் எதிரியின் திட்டங்களுக்கு இலக்காகிறார்கள். தேவனுடைய உன்னதமான திட்டங்கள் மற்றும் சிறந்த காரியங்களை இழந்துபோகும்படிக்கு ஒரு கிறிஸ்தவனை வழிதவறச்செய்ய, அவனை சோதனைக்குள்ளாக்கி, தொந்தரவு செய்வதில் மகிழ்ச்சியடையும் பிசாசு ஒருவன் இருக்கிறான் என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

# 2
# தவறான தெரிவுகள், தவறுகள் மற்றும் அவற்றின் விளைவுகள்

**கலாத்தியர் 6:7,8**

**[7] மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.**

**[8] தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.**

இப்படிப்பட்ட மற்றும் இன்னும் பிற "பதட்டங்கள்" ஏற்படும்போது, கூடுதலாக உலகத்தின் நெருக்கடிகளும் பிசாசின் சோதனைகளும் அவன் வாழ்வில் பெருகும்போது, ஒரு கிறிஸ்தவன் தவறுகள் செய்ய வாய்ப்பு உள்ளது. இதைச் சொல்வது கிட்டத்தட்ட அவிசுவாசமாகவும் எதிர்மறையாகவும் தெரிகிறது, ஆனால் சில நேரங்களில் நம் வாழ்க்கையில் நாம் அவநம்பிக்கையான தெரிவுகளையும் எதிர்மறையான முடிவுகளையும் எடுப்பது உண்மைதான். வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் சமரசம் செய்துகொண்ட பல விசுவாசிகளைப் பற்றி யோசித்துப் பாருங்கள். கல்வி மற்றும் தொழிலைத் தேர்வு செய்தல், வசிக்கும் இடம், நண்பர்கள், நிதியைக் கையாளுதல், பொழுதுபோக்குகள் மற்றும் இவை போன்ற பல காரியங்களுடன் தொடர்புடைய பல முடிவுகளைக் கவனித்துப் பாருங்கள். ஒருவன் தன் பரலோக அழைப்பைப் பின்தொடர்கையில் அவன் மேலும் முன்னேறும்போது காரியங்கள் இன்னும் கடினமாகின்றன, ஏனென்றால் அவன் ஒவ்வொரு தீர்மானத்தையும் எடுக்கும்போது—அதாவது இங்கே பூமியில், ஒருவன் எங்கே, எப்போது, என்ன, எப்படி தனது வாழ்க்கையின் ஒவ்வொரு தீர்மானத்தையும் எடுக்கிறானோ, அது தேவனுடைய ராஜ்யத்தில் அதன் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை உணரத் தொடங்குகிறான்.

நாம் எடுக்கும் அனைத்துத் தீர்மானங்களுக்கும் அதற்கேற்ற விளைவுகள் உண்டு. நம்மில் சிலர் காரியத்தின் தீவிரத்தை இன்னும்

உணரவில்லை. நம் தேவன் கிருபையுள்ள தேவனாய் இருக்கிறார் என்பதை அறிந்து, நாம் அறிந்தோ அல்லது அறியாமலோ இதை "நன்மைக்கு ஏதுவாகப்" பயன்படுத்திக்கொள்கிறோம். ஆம், தேவனுடைய ராஜ்யத்தில் உள்ள அனைத்தும் கிருபையினால்தான் நடைபெறுகிறது, இருப்பினும், கர்த்தர் நம் மீது சில பொறுப்புகளை வைத்துள்ளார். நமக்கு போதிக்கப்பட்ட சத்தியங்களின்படி வாழ்வது நமது பொறுப்பு. கடினமாக உழைப்பதும், எந்தச் செயலைச் செய்தாலும் சோம்பலைத் தவிர்ப்பதும் நமது பொறுப்பு. நமது மாம்சத்தை சிலுவையில் அறைவதும், உலகம் மற்றும் பிசாசின் சோதனைகளை எதிர்ப்பதும் நமது பொறுப்பு. கர்த்தர் நமக்காகத் தாமே செய்யாத சில விஷயங்கள்தான் இவை. அவர் நமக்கு ஞானத்தை வழங்குவார் (ஞானம் வேண்டி நாம் அவரைத் தேடினால்) ஆனால் தீர்மானங்களை நாம்தான் எடுக்க வேண்டும், மற்றும் நாம் எடுக்கும் தீர்மானங்களின் விளைவுகளை எதிர்கொள்ள நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

# 3
# ஆகவே, ஞானமுள்ளவர்களாய் இருங்கள்

**மத்தேயு** 10:16
**ஆடுகளை ஓய்நாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன், ஆகையால், சர்ப்பங்களைப்போலவினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.**

ஆடுகள், அதாவது தேவனுடைய ஜனங்கள், குறிப்பாக நட்புடன் பழகும் சூழலில் இல்லை! இதைப் பற்றி நம்மை எச்சரித்து, *"சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய்"* இருக்கும்படி கர்த்தராகிய இயேசு அறிவுறுத்தினார். உலகம் நமக்கு விரோதமாகவும் பொல்லாததாகவும் இருந்தாலும், அதன் பொல்லாப்பை நாம் பொல்லாதவர்களாக இருப்பதன் மூலம் ஈடு செய்ய முடியாது. மாறாக, நாம் *"தீமையை நன்மையால் வெல்ல வேண்டும்"* (ரோமர் 12:21). கிறிஸ்துவின் கிருபையிலும் நற்பண்புகளிலும் நாம் நடக்க வேண்டும். நட்புடன் பழகும் சூழல் இல்லாத உலகத்தில் *"புறாக்களைப் போல கபடற்றவர்களாக"* இருக்க வேண்டும் என்று இயேசு நம்மை வற்புறுத்தியபோது, இதைத்தான் அர்த்தப்படுத்தினார். இயேசுவின் அறிவுரையின் மற்ற அம்சம் *"சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களாக"* இருக்க வேண்டும் என்பதேயாகும். நாம் இவ்வுலகில் வாழும்போது புத்திசாலித்தனமாகவும், விவேகமாகவும் இருக்க வேண்டும். நாம் நமது ஆவிக்குரிய வாழ்வை ஞானத்துடனும் புரிதலுடனும் இணைத்து வாழ வேண்டும், குறிப்பாக இந்த வாழ்வின் காரியங்களில் நாம் மிகவும் ஞானமாய் இருக்க வேண்டும். இந்த உலக ஜனங்கள் பெரும்பாலும் நமது ஆவிக்குரிய வாழ்க்கையினால் ஈர்க்கப்படுவதில்லை. இன்னும் சொல்லப்போனால், பலர் ஆவிக்குரிய எண்ணம் கொண்ட கிறிஸ்தவர்களை இழிவாகவும் மிகவும் அலட்சியமாகவும் எண்ணுகிறார்கள். எனவே, நாம் இந்த உலகில் பிழைத்து, வெற்றியுடன் வாழ வேண்டுமானால் நமக்கு ஓரளவு ஞானம் தேவையாய் இருக்கிறது.

# 4
# ஆவிக்குரியது ஆனாலும் நடைமுறையானது

ஆவிக்குரியவர்களாய் இருப்பது எவ்வளவு நல்லதோ, குறிப்பாக எவ்வளவு முக்கியமானதோ, நாம் நடைமுறையில் வாழ்வதும் அவ்வளவு முக்கியமானதாகும். ஆவிக்குரியவர்களாய் மட்டும் இருப்பதால், தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும், பூமியில் கர்த்தருக்காக அதிக காரியங்களை நிறைவேற்றுவதற்கும் ஒருவரின் வெற்றிக்கு அது உத்தரவாதம் அளிக்காது. ஒருவர் ஆவிக்குரிய வாழ்வை நடைமுறை வாழ்வின் ஞானம் மற்றும் புரிதலுடன் இணைத்து வாழ வேண்டும். உதாரணமாக, நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருக்கிறீர்கள் என்பதால், உங்கள் திருமண வாழ்க்கை வெற்றியுள்ளதாய் அமைவது நிச்சயம் என்று அர்த்தமில்லை. உங்கள் திருமணம் மற்றும் குடும்பத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ள நடைமுறை சிக்கல்களையும், மகிழ்ச்சியான வீட்டைக் கட்டுவதற்கு அந்தப் புரிந்துகொள்ளுதலின் முக்கியத்துவத்தையும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். அதேபோல, நீங்கள் தசமபாகம் கொடுத்து காணிக்கையை செலுத்திவிட்டால் போதும் என்று நினைத்துக்கொண்டு, பொருளாதார ரீதியாக செழிப்பை எதிர்பார்க்கிறீர்கள் என்றால் அது தவறு. இதுமட்டுமின்றி, கையில் இருக்கும் மீதமுள்ள பணத்தை எப்படித் திட்டமிட்டு செலவழிப்பது மற்றும் எப்படி புத்திசாலித்தனமாக பயன்படுத்துவது என்பதை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

தேவன் தமது பிள்ளைகளுக்கு தெய்வீக ஆரோக்கியத்தை அளித்து ஆசீர்வதிக்கிறார் என்று நீங்கள் விசுவாசிப்பதால், உங்கள் உணவுப் பழக்கங்களில் நீங்கள் ஒழுங்கற்றவராக இருக்கலாம் என்றோ அல்லது அதிக வேலைப் பளுவைக் கொடுத்து உங்கள் சரீரத்தைத் துன்பப்படுத்தலாம் என்றோ அர்த்தமல்ல. தம்முடைய ஜனங்கள் தங்கள் சரீரத்தைக் கவனித்துக்கொள்வதில் ஒழுக்க உணர்வைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, அது தேவனுடைய

ஆலயமாய் இருக்கிறது. மேலும், தேவன் உங்கள் வாழ்க்கையில் ஒரு அழைப்பை வைத்திருக்கிறார் என்பதை அறிந்திருப்பதால், நீங்கள் வாழ்க்கையில் எந்த ஒரு குறிக்கோளும் இன்றி "அலைந்து திரிந்துகொண்டு", பிறகு தேவன் உங்களுக்காகத் திட்டமிட்ட அனைத்தையும் அவர் நிறைவேற்றும்படி எதிர்பார்ப்பது என்பது அதற்கான அர்த்தமல்ல. மறுபுறம், நீங்கள் உங்களை ஆயத்தப்படுத்தவும், பயிற்சி செய்யவும் மற்றும் மேம்படுத்திக்கொள்ளவும் வேண்டும் மற்றும் உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக படிப்படியாக தேவனுடன் இணைந்து செல்ல வேண்டும்.

கிறிஸ்தவ ஊழியத்தில் இருப்பவர்கள், பூமியில் முழுமையாகச் செயல்படுவதற்கு ஒரு வலுவான அபிஷேகம் மட்டும் பெற்றிருந்தால் போதாது. பூமியில் தேவனுக்காக வல்லமையாய் செயல்பட, நமது ஊழிய முயற்சிகளை எவ்வாறு ஒழுங்கமைப்பது, ஒருங்கிணைப்பது மற்றும் முறையாகத் திட்டமிடுவது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். சாத்தானின் நுகத்தடிகளை அழிப்பதும், ஜனங்களின் வாழ்விலிருந்து சுமைகளை நீக்குவதும் அபிஷேகமே என்பது உண்மைதான், ஆனால் நிர்வாகக்குறைவும் முறையற்ற திட்டமிடலுமே, அநேகரிடத்தில் ஒப்படைக்கப்பட்ட அபிஷேகத்தின் பலத்தைப் பெருக்கிக்கொள்ளத் தடையாக இருக்கிறது என்பதும் உண்மைதான்.

சில நேரங்களில், நாம் தேவனைவிட மேலான ஆவிக்குரியவர்களாய் இருப்பதைப்போல் நடிக்கிறோம்! சில சமயங்களில், நமக்கும் பூமிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதைப்போல, நாம் மிகவும் ஆவிக்குரியவர்களாக மாறுகிறோம். அத்தகைய சூழ்நிலைகளில் தம்முடைய ராஜ்யத்திற்கு பயனுள்ள எதையும் நம்மை செய்ய வைக்க தேவனுக்குக் கூட கடினமாகத்தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்! நம்முடைய செயல்கள் நம் வாழ்வுக்கான தேவனுடைய திட்டத்தைப் பாதிக்கிறதா, மாற்றியமைக்கிறதா மற்றும் அதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறதா என்ற பிரச்சினையைக் குறித்து பல நாட்களாக, நான் அநேக நேரங்களில் சிந்தித்ததுண்டு. அது மிகவும் நிதானிக்கக் கூடிய நேரம். ஒருபுறம், தேவன் ராஜரீகம்பண்ணுபவர் என்பதையும், யாராலும் அவருடைய திட்டங்களைத் தோற்கடிக்க முடியாது என்பதையும் நான் அறிந்திருந்தேன். *"தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்.*

*நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்"* (யோபு 42:2). ஆயினும்கூட, மறுபுறம், தேவன் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்ற மனுஷனுடைய கீழ்ப்படிதலும் ஒத்துழைப்பும் அவருக்குத் தேவைப்படுகிறது என்பதை வேதாகமம் முழுவதும் காண்கிறோம். பொதுவாகவே "உலகளாவிய" அளவில், தேவன் தமது ராஜரீகத்தினால் ஒட்டுமொத்த மனுக்குலத்திற்காக அவர் கொண்டிருக்கிற நோக்கம் முழுவதையும் நிறைவேற்ற சித்தமுள்ளவராய் இருக்கிறார். ஆனால் தனிப்பட்டவிதத்தில், நமது செயல்கள் நம் வாழ்வுக்கான தேவனுடைய நோக்கங்களின் வெளிப்படுதலையும் நிறைவேறுதலையும் பாதிக்கின்றன. பல கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த செயலின் நிமித்தமாக, தேவன் அவர்களுக்காக வைத்திருக்கும் உன்னத மற்றும் சிறந்த திட்டங்களைத் தங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றத் தவறுகிறார்கள் என்பது வருந்தத்தக்க ஒரு உண்மையாகும்.

# 5
# ஞானம்—நமது பாதுகாப்பு

பிரசங்கி 9:16,18

[16] **பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்றேன்.**

[18] **யுத்த ஆயுதங்களைப்பார்க்கிலும் ஞானமே நலம்,**

பிரசங்கி 10:10

**... ஞானமே பிரதானம்.**

நீதிமொழிகள் 4:7,8

[7] **ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி:**

[8] **நீ அதை மேன்மைப்படுத்து, அது உன்னை மேன்மைப்படுத்தும்: நீ அதைத் தழுவிக்கொண்டால் அது உன்னைக் கனம் பண்ணும்.**

இதைப் பற்றி நான் தொடர்ந்து சிந்தித்துப் பார்த்தபோது, என் சொந்த வாழ்க்கையில் நான் தவறு செய்த பல நிகழ்வுகள் எனக்கு நினைவுக்கு வந்தன. நான் கடினமாக உழைத்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? மற்றதைத் தவிர்த்து இதைத் தேர்ந்தெடுத்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? எனது நேரத்தையும் ஆற்றலையும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் முதலீடு செய்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? அப்போதே எனக்குத் தேவையான தகவல்களும் அதைப் பற்றிய அறிவும் இருந்திருந்தால்—அது எனக்கு நன்றாகத் தெரிந்திருந்தால் காரியங்கள் மாறுதலாக இருந்திருக்குமோ? என் சொந்த செயலினால் நான் அனுபவித்த சில கஷ்டங்களையும் சிரமங்களையும் என்னால் தவிர்த்திருக்க முடியும். இந்த விஷயங்களை நான் சிந்தித்துப் பார்த்தபோது, பரலோகத்திலுள்ள பிதாவை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிட்டு, என் வாழ்க்கையில் அவர் வைத்திருக்கிற உயர்ந்ததும் சிறந்ததுமான திட்டத்தை நான் தவறவிடக்கூடாது என்று சொல்லி ஜெபிக்க மட்டுமே என்னால் முடிந்தது. புத்திசாலித்தனமான தீர்மானங்களை எடுப்பதன் முக்கியத்துவத்தை இன்னும் தீவிரமாகக் கருத்தில்கொள்ள வேண்டும் என்ற உணர்வை நான் அடைந்தேன். ஞானமே நமது பாதுகாப்பு. நாம் ஞானமுள்ளவர்களாய் நடக்கும்போது,

பாதுகாப்பாக நடப்போம்., *"... ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும். எல்லாக் காரியத்துக்கும் காலமும் நியாயமுமுண்டு, ஆதலால் மனுஷனுக்கு நேரிடும் சஞ்சலம் மிகுதி"* (பிரசங்கி 8:5,6) என்று வேதம் நமக்குச் சொல்கிறது. ஒவ்வொரு விஷயத்திற்கும் சரியான நேரமும் சரியான தீர்மானமும் உண்டு. சூழ்நிலைக்கு ஏற்றவாறு என்ன செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும் மற்றும் எப்போது செய்ய வேண்டும் என்பதை "ஞானத்தை" கொண்டு அறியலாம்.

*“உன் கால் நடையை சீர்தூக்கிப் பார்: உன் வழிகளெல்லாம் நிலைவரப் பட்டிருப்பதாக”* (நீதிமொழிகள் 4:26) என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சற்று நிறுத்தி, நீங்கள் எடுக்கும் முடிவுகளைப் பற்றி இரண்டு அல்லது மூன்று முறை மறுபடியும் சிந்தியுங்கள். பெரும்பாலும், புத்திசாலித்தனமான முடிவுகளை எடுக்கும்போது, நமக்குத் தெரிந்த விஷயத்தைப் பற்றிய நமது அறிவையும் புரிதலையும் பெருக்கிக்கொள்ள தகவல்களைப் பெற வேண்டும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதிகம் கற்றறிந்தவர்கள் மற்றும் அனுபவமுள்ளவர்களிடம் பேசி, நாம் காரியங்களைக் கற்றுக்கொள்வது நமக்குப் பெரிதும் பயனளிக்கும். அதனால்தான், *“ஞானமுள்ளவன் பெலமுள்ளவன்: அறிவுள்ளவன் தன் வல்லமையை அதிகரிக்கப்பண்ணுகிறான். நல்யோசனை செய்து யுத்தம்பண்ணு; ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும்”* (நீதிமொழிகள் 24:5,6) என்று வேதம் கூறுகிறது. ஆலோசனையும் அறிவுரையும் நமக்குத் தேவையில்லை என்று நினைக்கும் அளவுக்கு, நாம் மிகவும் ஆவிக்குரியவர்கள் என்று நினைத்துக்கொள்ளக்கூடாது.

ஊழியத்தில், வரங்களும் அபிஷேகமும் மிகவும் முக்கியமானவை. இருப்பினும், அவை அதிக அளவில் பயன்படுத்தப்படுவதற்கும் நீடித்த பலனை ஏற்படுத்துவதற்கும், நமது வரம் மற்றும் அபிஷேகத்துடன், நல்ல தலைமைத்துவ திறன், சிறப்பாகத் திட்டமிடுதல், கடின உழைப்பு, ஒழுக்கம், தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் அதிக அளவிலான தேவ ஞானம் ஆகிய இவற்றையும் சேர்த்து பணி செய்வது மிகவும் அவசியமாகும்.

# 6
# தேவனுடைய நன்மை

**நீதிமொழிகள்** 3:5,6

**[5] உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,**

**[6] உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்: அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.**

ஆயினும்கூட, ராஜரீகமுள்ளவரான நமது தேவன் நல்லவரும், இரக்கமுள்ளவருமாய் இருக்கிறார். ஒரு சிறிய அடைக்கலான் குருவியைக் கூட அவர் மறந்துவிடுவதில்லை. நம் தலையில் உள்ள முடிகள் கூட எண்ணப்பட்டுள்ளன (லூக்கா 12:6,7). அவர் ராஜரீகம்பண்ணுகையில், கர்த்தர் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் நம் அன்றாட வாழ்க்கையின் விவரங்களில் அவரே வந்து நமக்கு உதவுகிறார். நாம் அவரை நம்ப வேண்டும், அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மட்டுமே அவர் நம்மிடம் கேட்கிறார், மேலும் அவர் நம்மை வழிநடத்துவதாக வாக்குப்பண்ணியுள்ளார். ஆம், வாழ்க்கையின் பல பிரச்சினைகளைத் தீர்க்க ஞானத்தையும் புரிந்துகொள்ளுதலையும் தேட வேண்டிய பொறுப்பு நமக்கு வேண்டியதாய் இருக்கிறது. அவ்வாறு செய்யும்போது, நம் நடைகள் கர்த்தரால் ஒழுங்குபடுத்தப்படும். *"நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்"* (சங்கீதம் 37:23). தேவன் நமக்கென்று நியமித்துள்ள பாதையில் நம்மை வழிநடத்தும்படி, நம் வாழ்வின் நிகழ்வுகளை அவர் ஒழுங்குபடுத்துவார். இந்த செயல்பாட்டில், நாம் இன்னும் தவறு செய்தாலும், தடுமாறி விழுந்துகொண்டே இருந்தாலும், நாம் முற்றிலுமாக அழிக்கப்பட மாட்டோம், ஏனென்றால் கர்த்தர் நம்மைத் தாங்குகிறார். அது நம் வாழ்வைக் குறித்து தேவன் கொண்டிருக்கும் கனவின் முடிவாக இருக்காது. *"அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை, கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்"* (சங்கீதம் 37:24). அவர் நம்மைக் காலூன்றி நிற்கச் செய்து மீண்டும் பயணிக்க வைப்பார். தேவனுக்கே துதி உண்டாவதாக!

**சங்கீதம்** 40:1-3

**1 கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன், அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்.**

**2 பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி,**

**3 நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார், அநேகர் அதைக் கண்டு, பயந்து, கர்த்தரை நம்புவார்கள்.**

சங்கீதக்காரனாகிய தாவீது, தான் ஒரு “பயங்கரமான குழியில்” இருந்ததை உணர்ந்தான், அவனுடைய கால்கள் “உளையான சேற்றில்” சிக்கிக்கொண்டன. அவன் அந்த நிலையில் இருந்ததற்கு பல காரணங்கள் இருந்திருக்கலாம். ஆனால் அவன் தேவனுக்காக *பொறுமையாகக் காத்திருந்தபோது*, கர்த்தர் அவனுடைய கூப்பிடுதலைக் கேட்டு, அவனைக் குழியிலிருந்து வெளியே கொண்டுவந்து, அவனுடைய நடையை உறுதிப்படுத்தினார் (சங்கீதம் 40:1-3). அல்லேலூயா! இதுவே தேவனுடைய நன்மை. நாம் தவறு செய்து ஒரு பயங்கரமான குழியில் விழுந்தாலும் கூட, கர்த்தரால் நம்மைத் தூக்கிஎடுத்து, ஸ்திரமான இடத்தில் மீண்டும் நிறுத்த முடியும். நம் தவறுகள் நமக்கு வலியை ஏற்படுத்தலாம். நமது தவறான முடிவுகள் தாமதத்தை ஏற்படுத்தலாம். நமது தோல்விகள் திசையைத் திருப்பிவிடலாம், ஆனால் நாம் கர்த்தரைப் பற்றிக்கொள்ளும்வரையில், அவருடைய திட்டங்களை நம் வாழ்வில் நிறைவேற்ற அவர் நமக்கு உதவுவார். நமது தோல்விகளைவிட தேவன் பெரியவர். அவர் நம் தவறுகளைவிட பெரியவர். நம் தவறுகளிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொண்டு, புத்திசாலித்தனமாக, தொடர்ந்து பந்தயத்தில் ஓடினால், நம் இறுதி இலக்கை நோக்கி தேவன் நம்மை அழைத்துச் செல்வார். நம் புலம்பலை ஆனந்தக்களிப்பாக மாற்றக்கூடியவர் தேவன் ஒருவரே. *“என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர், ... நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்”* (சங்கீதம் 30:11). மோசமாக இருக்கும் விஷயங்களைக் கூட தேவனால் அழகானதாக மாற்ற முடியும். அவர் நமது விரக்தியை தெய்வீக இலக்குகளாக மாற்றுகிறார். தேவன் காலங்களைவிட மேலானவர். *"நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப்பூச்சிகளும், பச்சைப்புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப*

*அளிப்பேன்"* (யோவேல் 2:25). நம்முடைய தவறான தீர்மானங்களால் இழந்துபோன நேரத்தை எப்படி ஈடுசெய்வது என்பது அவருக்குத் தெரியும்.

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார். ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால்.

**அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை

சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம்(கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார்—உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது—அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும்** ஒரு திருச்சபையும், ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.

- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.

- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.

- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல

இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், கைதேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்துக்கு ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள் நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, apcwo.org/locations ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது contact@apcwo.org க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses–Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

புதிய புத்தகங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. PDF, ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய apcwo.org/books என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு apcwo.org/sermons என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் கவுன்சிலிங்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் கவுன்சிலிங்கானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில் ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

| | |
|---|---|
| **இளம் பிராய நடத்தை** | **நடத்தையில் சீர்கேடு** |
| **பிறரோடு இணைக்கக் குறைபாடு** | **ஆளுமை குறைபாடு** |
| **உறவுமுறை சவால்கள்** | **உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்** |
| **கல்வியில் பின்தங்கிய நிலை** | **மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி** |
| **தொழில் தொடர்பான பிரச்சினைகள்** | **மது / போதைப்பொருளுக்கு அடிமை** |
| **குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பின்** | **ஆவிக்குரிய போராட்டங்கள்** |
| **பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்** | **வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை** |

கிரிசலிஸ் கவுன்சிலிங் சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**Website: chrysalislife.org**

**Phone:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998

**Email: counselor@chrysalislife.org**

கிறிசலிஸ் கவுன்சிலிங் என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிஸ் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC Bank, 7M/308 80 Feet Road, HRBR Layout, Kalyan Nagar, Bengaluru, 560043, Karnataka, India

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிஸ்*

*சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* **apcwo.org/give** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**


## DOWNLOAD THE FREE APP!

*Search for*

"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play




*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், **திங்கள் முதல் வெள்ளி வரை**, இந்திய நேரப்படி **காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30)** வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்**: வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்**: ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்**: **apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்**, மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

நாம் அனைவரும் இன்னும் பூரணமுள்ளவர்களாக மாறாததால், தவறு செய்கிறோம் என்பது உண்மைதான். முதல் முறையாக நாம் சந்திக்கும் சூழ்நிலைகளில் தவறான தீர்ப்புகள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தலாம். நம்முடைய தவறான தெரிவுகள் தேவன் நமக்காக வைத்திருக்கும் திட்டங்களை எவ்வாறு பாதிக்கின்றன? தேவன் நமக்காக வைத்திருக்கும் உயர்ந்தவைகளும் சிறந்தவைகளுமான அவருடைய திட்டங்கள் நம் வாழ்வில் நிறைவேற்றப்படுவதை நம்முடைய தவறுகள் கெடுத்துப்போடுகிறதா, மாற்றுகிறதா அல்லது தடுக்கிறதா?

நமது கிறிஸ்தவ விசுவாசத்தின் நடைமுறைப் பக்கத்தை நோக்கி நம்மை விழிப்படையச் செய்வதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும். நமது வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதைக் குறித்த நமது முழுப் பொறுப்பையும் நமக்குப் புரியவைப்பதே இதன் நோக்கமாகும். நமது செயல்களை ஆவிக்குரிய மயமாக்குவதை நிறுத்திவிட்டு அவற்றுக்கான பொறுப்பை நாம் ஏற்க வேண்டும் என்பதற்கான அழைப்பே இது. இந்த உலக வாழ்க்கையின் காரியங்களில் "ஞானமுள்ளவர்களாய்" இருக்கும்படி விழிப்படையச் செய்ய இது ஒரு அறிவுறுத்தலாகும்.

**All Peoples Church & World Outreach**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org

ALL PEOPLES CHURCH